[1973 மார்ச் 30

உதாரணமாக கோவை நகரத்தை எடுத்துக்கொண்டால் அங்கிருந்து பீளமேடு ஏர் போர்ட் வரையில் இடைவெளி யில்லாமல் மக்கள் நெருக்கம் இருந்து கொண்டிருக்கிறது. கோவை நகரத்தின் எல்லைக்கோட்டை பீளமேடு ஏர் போர்ட் வரை நீட்டித்தால் அதை மாநகராட்சியாக்க உள்ள எல்லா வசதிகளும் இருக்கும். ஆகவே, நகர எல்லைக்கோட்டை மாற்றி யமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கெனவே இருக்கின்ற எல்லைக்கோட்டைக் குறைப்பதில்லை. ஆகவே, மாநகராட்சியாக்கும்போது எல்லைக்கோட்டை விரிவுபடுத்தி, வேறு பல பகுதிகளையும் இணைத்து, மக்கள் தொகையைப் பெருக்கி, வருமானத்தையும் பெருக்கிக் கொள்ளலாம் வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தால். கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Medical Officer at Puduruthamanur Health Centre

* 571 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Directorate of Vigilance and Anti-corruption has filed a case against the Medical Officer of the Primary Health Centre, Puduruthamanur in Lalgudi taluk in Tiruchirappalli district; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) புலன் ஆய்வுத் துறை மற்றும் இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் அந்த மருத்துவர்மீது ஓர் வழக்கைப் பதிவு செய்துள்ளது. அவ்வழக்கு இன்னும் புலனாய்வில் உள்ளது.

Drugs supplied to Mental Hospital, Madras

*572 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a number of Pharmacy shop owners have been prosecuted for supplying sub-standard drugs to the Mental Hospital, Madras in May 1972 ; and

(*b*) if so, the details thereof?

1973 மார்ச் 30]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) திருவாளர்கள் ஜெயின் பார்மஸூடிகல்ஸ் 19, கேசவ ஐயர் தெரு, சென்னை-3. போர்ஸ்டன் பார்மஸி, சென்னை-3 என்பவர்கள் தரக்குறைவானதும் போலிச் சீட்டு ஒட்டியதுமான குளோரச் ப்ரோமாசீன் ஹைட்ரோக்ளோரைய்ட் மாத்திரைகளை சென்னை அரசினர் மனநோய் மருத்துவ மனைக்கு வழங்கினதற்காகக் குற்ற நடவடிக்கைகளுக்குள்ளாக்கப் பெற்றனர்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த மருந்தையெல்லாம் உபயோகப்படுத்துவதற்கு முன்பாக அது சரியாக இருக்கிறதா எனபதை டெஸ்ட் செய்து உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்ருல் இனிமேலாவது அந்த முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சில மருந்து வகைகளில் சில சமயங்களில் தவறு ஏற்பட்டு விடுகிறது. ஆனல் இந்த மருந்து வகையில் அப்படியல்ல. 50 மில்லிகிராம் மருந்து சத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள அந்த மாத்திரைகளைப் பரிசோதனை செய்து பார்த்ததில் 9.8 மில்லிகிராம் அளவுதான் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே, மருந்து தயாரித்தவர்கள்மீது ஏமாற்றிய குற்றம் இருக்கிறது. இந்த மாதிரி மருந்துகளில் ஏதாவது குறைகள் இருக்கும் என்ற சந்தேகம் வரும்போது சோதனை செய்து பார்க்கிறோம். எல்லா மருந்துகளையும் பரிசோதனை செய்து பார்க்கும் நிலை இருந்தால்கூட இப்படிப் பட்டவர்கள் அந்த மருந்தின் முதல் 'பாட்ச்' வருகிறபோது ஏமாற்றுவதற்காக ஒரு 500 பாட்டில்களில் நல்ல மருந்தாக வைத்துவிட்டு, மிச்சம் உள்ள 5,000 பாட்டில்களில் தவறு செய்து ஏமாற்றி விடுவார்கள். அதனல் இவர்கள்மீது வழக்குத் தொடரப் பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னர்கள். அது சம்பந்தமான விவரங்களைத் தெரிவிப்பார் களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே ஒரு வழக்கு ஜெயின் பார்மஸூடிகல்ஸ் பற்றியது. அது இப்போதும் கோர்ட்டிலே இருக்கிறது. The entire matter is, therefore, *sub-judice*.

என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதிலே உள்ள சில விவரங்களை மட்டும் சொல்கிறேன். 50 மில்லிகிராம் சத்துள்ள மாத்திரை என்று கொடுத்ததில் 9.8 மில்லிகிராம்தான் இருந்தது. அதாவது ஐந்தில் ஒரு மடங்கு சத்துதான் இருந்தது. அந்த மருந்தைக்கூட அவர்கள் பாண்டிச்சேரியிலுள்ள ஒரு கம்பெனியில் வாங்கியதாக ஒரு கருத்து இங்கே காணப்படுகிறது.

ஆகவே, அங்கே சென்று விசாரித்ததில் அவர்கள் தயாரிக்க வில்லை என்றும், அவர்கள் வேறு கம்பெனியிலிருந்து வாங்கி 10 மில்லிகிராம் மாத்திரையை வாங்கி 50 மில்லிகிராம் என்று லேபிளை மாற்றி ஒட்டியதாகவும் காணப்படுகிறது. இன்னொரு வழக்கு போர்ஸ்டன் பார்மஸி பற்றியது.

" Messrs. Borston Pharma, Madras 7, were prosecuted under Drugs and Cosmetics Act, 1940, and its proprietor Thiru Nagarathinam was fined Rs. 75 while its Manager Thiru Ramalingam was released under the Probation of Offenders Act."

என்று அதிலே முடிவுகட்டி, தீர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தக் குற்றம் செய்தவர்களை 'பிளாக் லிஸ்டில்' போட்டு, மேலும் இவர்களுக்கு ஆர்டர் கொடுக்காமல் இருக்க எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எடுத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இப்படிப்பட்டக் குற்றம் தவறுதலாக நடந்ததல்ல, வேண்டுமென்றே செய்யப்பட்டது. அதனால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்தமாதிரியான மாத்திரைகள் இந்த மென்டல் ஆஸ்பிட்டல் மட்டுமல்ல; மாநிலத்திலுள்ள பல்வேறு ஆஸ்பிட்டல்களுக்கும் பல்வேறுபட்ட கம்பெனிகளால் வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சாப்பிடுவதனால் எந்தவிதமான பலனும் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்தமாதிரியான போலி மருந்துகளைத் தயாரிப்பவர்களை எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்படிப் பொதுவாக ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிற காரணத்தால்

1973 மார்ச் 30]

உண்மையை அறிவது கடினமாக இருக்கின்றது. ஏனென்றால் குற்றச்சாட்டுகள் எந்த அளவுக்குப் பொதுவாகச் சொல்லப்படுகின்றனவோ அந்த அளவுக்குப் போலி மருந்து தயாரிப்பவர்கள் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். எங்காவது மருந்துகளில் தரக்குறைவு இருக்கிறது என்று டாக்டர்கள் தெரிவிப்பார்களானால் அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து, தரக்குறைவு என்று சொல்லப்படும் மருந்துகளைக் கைப்பற்றி, ஆராய்ந்துபார்த்து மேல் நடவடிக்கை எடுக்க முடியும். 100 பேர்கள் தவறு செய்வதாக அறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதில் 50 பேராவது தண்டிக்கப்பட்டால் மற்றவர்கள் திருந்திக்கொள்ளக்கூடும். மேலும் இம்மாதிரியான முயற்சிகளில் ஈடுபடமாட்டார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத்தலைவர் அவர்களே, இம்மாதிரி மருந்து உற்பத்தி செய்கிறவர்கள் ஏகமாக விலையை அதிகப்படுத்திக் கொள்ளை அடிக்கிறார்கள். தரமில்லாத மருந்தையும் தயாரிக்கிறார்கள். ஆகவே, மருந்து உற்பத்தி செய்கிற தொழிலை அரசே எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு ஆஸ்பத்திரிகளுக்கு உடனடியாகத் தேவைப்படுகிற, அன்றாடம் தேவைப்படுகிற மருந்துகளை உற்பத்தி செய்யலாம் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு அதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மருந்துகளின் விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. நாம் நமக்குத் தரப்படுகிற டெண்டர்களில் எது குறைந்தது என்று வேண்டுமானால் பார்த்து அதை வாங்கிக்கொள்ளலாம். மேலும் மருந்தை யார் உற்பத்தி செய்தாலும் ட்ரக் டெஸ்ட்டிங் லாபரட்டரி, ரீஜினலாக, மாநிலத்திற்கு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதால் நாம் மத்திய அரசை நிதி உதவி கேட்டும் அவர்கள் தராத காரணத்தினால் உடனடியாக அந்தக் காரியத்தையும் நம்மால் செய்ய முடியவில்லை.

Research on Filariasis.

*573 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any research is being conducted in this State into Filariasis; and

(*b*) if so, the details thereof?